# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்

CONNEMARA PUBLIC LIBRARY
18 JAN 1956
MADRAS

—:o:—

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 19 | ஜய ஸ்ரீ வைகாசி மீ 1954 மே | பகுதி 2

## கல்வி மகாநாடு மலர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - AUG 1954
MADRAS

467
2-54



*The Chief Guests arrive.*

உள் நாடு: வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதி ரூ. 0—4—0

CONNEMARA PUBLIC LIBRARY
18 JAN 1956
MADRAS



*Sri V. S. Thyagaraja Mudaliar delivering the Welcome Address.*



*Sri C. Subramaniam inaugurating the Conference.*

# பாலர் கல்வி

| தொகுதி 19 | ஜய ௵ வைகாசி ௴<br>1954 மே | பகுதி 2 |
|---|---|---|


## 44-வது சென்னை ராஜ்ய கல்வி மகாநாட்டில்

### ஸ்ரீ வி. எஸ் தியாகராஜ முதலியார் வரவேற்புரை

வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ வி. எஸ். தியாகராஜ முதலியார் தமது வரவேற்புரையில் கூறியதாவது :—

இம்மகாநாட்டிற்குத் தலைமை வகித்து அதனை நடத்தி வைக்க டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியாரைத் தவிர பொருத்தமான யாரையும் சென்னை ராஜ்ய ஆசிரியர் யூனியன் தேர்ந்தெடுத்திருக்க முடியாது. சிறந்த கல்வியாளரும், வைத்திய நிபுணருமான ஸ்ரீ. முதலியார் நம் நாட்டினர் பாராட்டுதலையும், மதிப்பையுமின்றி பிற நாடுகளின் பாராட்டையும் பெற்றிருக்கிறார். ஆகவே சர்வதேச புகழ் படைத்த ஒருவர் நம்மிடையே தலைமை வகிக்க வந்திருப்பது நமது அதிர்ஷ்டந்தான். இம் மகாநாட்டை ஆரம்பித்து வைக்க ஸ்ரீ சுப்பிரமணியம் இசைந்ததற்கும் நாம் நன்றி தெரிவிக்கிறோம். கல்வி, நிதி இலாக்காக்களின் பொறுப்புகளை வகித்து வரும் மந்திரியாவர் அவர். கல்வித்துறை சம்பந்தமான சீர்திருத்தங்களைச் செய்வதில் அதிக சிரத்தை காண்பித்து வருவது எல்லோருக்கும் தெரியும். அவர் இம்மகாநாட்டில் கலந்து கொள்வதும், ராஜ்யத்தின் வருங்காலக் கல்விக்கு நல்ல சூசகமாகும். கல்விக் கண் காட்சியைத் திறந்துவைக்க சம்மதித்துள்ள கல்வி இலாகா டைரக்டர் ஸ்ரீ எஸ். கோவிந்தராஜுலுவுக்கும் நன்றி தெரிவிக்கிறோம். அவர் கல்வித்துறையில் செய்துள்ள சேவையும் பாராட்டுதற்குரியது

ராஜ்யக் கல்வி மகாநாடு இரண்டாவது தடவையாக (17 வருஷங்களுக்கப்புறம்) தஞ்சையில் நடைபெறுகிறது. 20 வருஷங்களுக்கு முன்பிருந்ததைவிட நம் நாட்டிலும் குறிப்பாக நம் ராஜ்யத்தில் கல்விப் பிரச்னைகள் பெரிதும் மாறிவிட்டன, சுதந்திரத்திற்குப் பின் கல்விக் கொள்கைப் பற்றிய நோக்கங்கள் மாறி வருகின்றன. இந்நோக்கங்களுக்கு ஏற்ப கல்வித் திட்டத்தை வகுக்க வேண்டும். ஒரு நாடு திட்டமிட்டு அபிவிருத்தி செய்ய வேண்டிய காரியங்களுள் கல்வி முக்கியத்வம் வாய்ந்ததாகும். நாடானது மேற்கொள்ளும் கடமைகளை உத்தேசித்து கல்வி வகுக்கப்பட வேண்டும். ஜனநாயக அமைப்பில் நாட்டின் விவகாரங்களில் மக்கள் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியிருப்பதால் கல்வி முக்கியத்வமானதாகும். மக்களின் கூட்டுறவு, கட்டுப்பாடான பிரஜைப் பொறுப்பு மூலமே ஜனநாயகம் வெற்றியடைய முடியும். உரிமைகளுக்கு முன்னதாகப் பொறுப்புக்களை வகிக்க மக்களுக்கு பயிற்சியளிப்பதில் கல்வித் திட்டம் உதவ வேண்டும். கலாசார தேவைகளையும் அது பூர்த்தி செய்யவேண்டும்.

#### அதிகக் கல்வி வசதி தேவை

நமது ஜனத்தொகையை உத்தேசிக்குமிடத்து ஏற்கெனவே இருக்கும் கல்வி வசதிகள் போதா. அரசியல் சட்டம் அமலுக்கு வந்த 10 வருடங்களில் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வி அளிக்க வேண்டுமென்று சட்டம் கூறுகிறது. நம் நாட்டில் 17 சதவிகிதத்தினரே கல்வி கற்றவர்கள். 5 வருஷத் திட்டத்தில் பாதிக்கு மேல் ஆகிவிட்ட போதிலும் நாம் லட்சியத்தைக் கிட்டக்கூட நெருங்கவில்லை.

தொழில் நுணுக்க தொழில் கல்விக்கு போதிய வசதிகளில்லாததும் மற்றொரு பிரச்னையாகும். இதனால் தேவைக்கும், போக்குக்கும் பொருத்தமில்லாதபடி அதிகமானவர்கள் பொதுக் கல்வியைக் கற்க வேண்டியிருக்கிறது. ஏட்டுப்படிப்பு அள

வுக்குமீறி வற்புறுத்தப்படுகிறது. இதன் விளைவாக படித்தவர்கள் சர்க்கார் உத்தியோகங்களையும் வர்த்தக ஸ்தாபனங்களின் உத்தியோகங்களையும் நாடுகிறார்கள். இதனாலும் சர்வகலாசாலைகளின் பளு அதிகரிக்கிறது. செகண்டரி கல்விக்குப்பின் வேறு மாற்று திட்டமின்றி பல மாணவர்கள் சர்வகலாசாலைகளில் சேர்கிறார்கள். ஆரம்பத்திலிருந்தே அனுஷ்டான ரீதியான யோசனைகளில் கவனம் செலுத்த வேண்டும். செகண்டரி கட்டத்தில் நாட்டின் தேவைக்கும் கல்வி ஸ்தாபனங்கள் வசதிக்கும் பொருத்தமிருக்க வேண்டும்.

## பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தேவை

நாட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவு; ஆகவே அவர்கள் பயிற்சி பெறுவதற்கான வசதிகள் அளிக்கப்படவேண்டும். கல்விச் சீரமைப்பிற்கு ஏற்கெனவே தேர்ச்சி பெற்றவர்கள் மறு பயிற்சி பெறுவதற்கான வசதிகளும் தேவை. இது தீர்க்கப் படவேண்டிய மற்றொரு பிரச்னையாகும்.

ஆசிரியர்களின் சம்பள விகிதங்களும், சர்வீஸ் நிலைமையும் திருப்திகரமாக இல்லை. கல்வியின் தரம் குறைவாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். கல்வித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவது ஆசிரியர்களைப் பொறுத்த விஷயம் என்பதைக் குறிப்பிட வேண்டியதில்லை. அவர்களுக்கு நியாயமான சம்பளமும், அலவன்ஸ்களும் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர் தொழில் உன்னத தொழில் என்று கூறப்படுகிறது. ஆகவே இத்துறையில் உள்ளவர்கள் தேச சேவை செய்வதாகக் கருதுகிறார்கள். அவர்கள் வசதியான வாழ்க்கை நடத்துவதற்கு உதவியளிப்பது நமது கடமையாகும். இதற்கு ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். ஆந்திர சர்க்காரால் நிறுவப்பட்ட கமிட்டி அங்கு ஆசிரியர் சம்பள விகிதங்களை உயர்த்த சிபாரிசு செய்திருக்கிறது. இம்மகாநாட்டில் நிறைவேறும் தீர்மானங்களை சர்க்கார் அனுதாபத்துடன் கவனிப்பார்களென்று நம்புகிறேன். மற்ற ராஜ்யங்களில் தொழிற் சங்க அடிப்படையில் போன்றல்லாமல் நம் ராஜ்யத்திலுள்ள ஆசிரியர்கள் மிகவும் அடக்கத்துடன் நடந்து கொண்டிருப்பது திருப்தியளிக்கக் கூடிய விஷயம்.

## கல்விச் சீர்திருத்தம்

கல்விச் சீர்திருத்தம் அதிக ஜாக்கிரதையுடன் விபரிக்கப்பட்டு பின்பு அமல் நடத்தப்பட வேண்டும். இவ்விஷயத்தில் அவசரப்பட்டு எதுவும் செய்தால், சிக்கல்கள் ஏற்படும். நம்மிடையே அனுபவமிக்க சிறந்த கல்வியாளர்கள் இருப்பது அதிர்ஷ்ட வசமாகும்.

எலிமெண்டரி கல்வி, செகண்டரி கல்வி, சர்வகலாசாலைப் படிப்பு முதலியன பற்றி சாதாரண பிரஜை என்ற முறையில் எனக்குத் தோன்றிய சில யோசனைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிரைமரி கல்வி சிறுவர் சிறுமியர் ஒவ்வொருவருக்கும் போதிக்கப்பட வேண்டும். மகாத்மா காந்தி கூறியது போல அது கைவேலைத் தொழில் அடிப்படையில் அமைய வேண்டும். பின் தங்கிய வகுப்பினர் குழந்தைகளுக்கு விசேஷ வசதியளிக்க வேண்டும். இதுபற்றி சர்க்கார் முடிவு செய்யவேண்டும்.

எலிமெண்டரி கல்வி பற்றி குறிப்பிடுகையில், நர்ஸரி பள்ளிக்கூடப் படிப்பு கட்டம் போன்ற பூர்வாங்க எலிமெண்டரி கல்வி கட்டம் பற்றியும் ஞாபகத்திற் கொள்ளவேண்டும். பெரிய நகரங்களில் வசிக்கும் பணக்கார மத்தியதர வகுப்பினர் குழந்தைகளுக்கு இவ்வசதி கிடைக்கிறது. ஏழைகளுக்கு இவ்வசதி கிடைப்பதில்லை. அவர்களும் இதைப்பெற வேண்டும். இது பற்றி சர்க்கார் பரிசீலிக்க வேண்டும்.

நம் தலைவர் முன்னிலையில் செகண்டரி கல்வி பற்றி நான் குறிப்பிடத் தயங்குகிறேன். அதற்கு நியமிக்கப்பட்ட கமிட்டியின் தலைவராக இம் மகாநாட்டுத் தலைவர் சேவை செய்துள்ளது நமக்குத் தெரியும். 6 மாதகாலம் அவர் நாடெங்கும் சுமார் 50 இடங்களுக்கு மேல் சென்று நூற்றுக்கணக்கானவர்களைச் சந்தித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மத்ய சர்க்கார் அதை பரிசீலனை செய்து வருகிறது. முக்கிய சிபார்சுகள் அமல் நடத்தப்படும் என்று நம்புகிறோம். சில சிபார்சுகள் பலருடைய ஆதரவைப்பெற்றிருக்கின்றன. செகண்டரி கல்விப் படிப்பு ஒரு வருஷம் அதிகரிக்கப்பட்டு சர்வகலாசாலை கட்டத்தில் ஒரு வருஷம் குறைக்கப்பட்டிருப்பது பற்றி அபிப்ராய பேதம் தெரிவிக்கப்

பட்டது. ஆனால், இதற்கு ஆதரவு படிப் படியாக ஏற்பட்டு வருகிறது. இம்மகா நாட்டிலும் அந்த அறிக்கையில் காணப் படும் சிபார்சுகள் பரிசீலனை செய்யப்படும் என்று நம்புகிறேன்.

தொழில் நுணுக்க டெக்னலஜி கல்வி அதிக முக்கியத்வம் பெற்று வருகிறது. தொழிற் கல்விக்கு ஆதரவு அவசியமென் பதை உணர்ந்து வருகிறார்கள். செகண் டரி கல்வி இதையனுசரிதது சீர்திருத்தப் படுகிறது.

சர்வகலாசாலை படிப்பு பற்றியும் நான் பேச நமது தலைவர் முன்னிலையில் தயங்கு கிறேன். ஏனென்றால் அவர் சர்வகலாசாலை யின் உப அத்யட்சகராக தொண்டாற்றி அனுபவம் பெற்றவர். அவர் இத்துறையில் நமக்கு வழி காட்டுவார் என்று நம்பு கிறேன். அவர் கல்வி சம்பந்தமான மேல் நாட்டு மகாநாடுகளில் கலந்து கொண்டுள் ளார். இங்கு சர்வகலாசாலைப் படிப்பும் காலத்திற்கேற்ப உருவாகிறது.

சர்வகலாசாலை கட்டத்தில் போதனு பாஷை பற்றியும் இம்மகாநாட்டில் பரி சீலனை செய்ய வேண்டும். ஆங்கிலம், பிர தேச பாஷை, இலக்கிய மொழிகள் பெற வேண்டிய இடம் பற்றியும் விவாதித்து முடிவு செய்ய வேண்டும்.

சர்வகலாசாலைகளில் அடுத்து வரும் பல வருஷங்களுக்கு ஆங்கிலமே போதனு பாஷையாக இருக்க வேண்டும் என்பது எனது நம்பிக்கையாகும். செகண்டரி கட்டத்தில் அது இரண்டாவது கட்டாய மொழியாக போதிக்கப்பட வேண்டும். அரசியல், ராஜதந்திர வர்த்தகத்துறையில் உலகில் மற்ற நாடுகளுடன் தொடர்புக்கு ஆங்கிலம் தெரிவது அவசியமாகும்.

பொது நிர்வாகம், தொழில் நிர்வாகம் பற்றியும் இளைஞருக்கும் யுவதிகளுக்கும் பயிற்சியளிக்க கல்வி ஸ்தாபனங்கள் ஆரம் பிக்கப்பட வேண்டியது அவசியம். பின்பு அவர்கள் ஸ்தானீகராகப் பதவிகளை அயல் நாடுகளில் வகிக்க இந்த அனுபவத்தைப் பெறலாம். தென்னிந்தியாவில் இதற்கு ஒருபள்ளியோ, கல்லூரியோ இல்லை.

இதுபோன்ற வருடாந்திர மகாநாடுகள் நடைபெறுவது அவசியம். கடந்தகால சாதனை பற்றி பரிசீலனை செய்து, வருங் காலத்திட்டம் பற்றியும் யோசிக்க இம் மகாநாடுகள் உதவும். நான் எனக்குத் தோன்றிய சில யோசனைகளைத் தெரிவித் துள்ளேன். நமது கல்வியாளர் கூறுவதை யும் கேட்டு முடிவு செய்ய சிந்தித்து, பார பட்சமின்றி முடிவு செய்யவும், விவேகத் துடன் திட்டமிடவும், போதிய திறமை யைப் பெறுவோமாக.

---

## தென் இந்திய ஆசிரியர் சங்கம்

### 1954 மே மாதத்திய நாட்குறிப்புக்கள்.

10-5-54 : கல்வி மகாநாட்டில் கொண்டுவரப்போகும் தீர்மானங்களும் மகாநாட்டு நிகழ்ச்சி நிரலும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் எல்லாருக்கும் அனுப் பப்பட்டன.

14-5-54 : தென்னிந்திய ஆசிரியன்—மார்ச் 1954—பிரசுரம்.

15-5-54 : பாலர் கல்வி—மார்ச் 1954—பிரசுரம்.

25-5-54 : நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் (தஞ்சாவூரில்)

26-5-54 : மாகாணக் கல்வி மகாநாடு—முதல் தினம்.

" தென்னிந்திய ஆசிரியன்—ஏப்ரல் 1954 பிரசுரம்.

27-5-54 : மாகாணக் கல்வி மகாநாடு—இரண்டாவது தினம்.

28-5-54 : மாகாணக் கல்வி மகாநாடு—மூன்றுவது தினம்.

" தென்னிந்திய ஆசிரியர் சங்க ஜனரல்பாடி மீட்டிங்.

# 44-வது சென்னை ராஜ்ய கல்வி மகாநாட்டில்

## டாக்டர் லக்ஷ்மணஸ்வாமி முதலியாரின் தலைமை உரை

டாக்டர் லக்ஷ்மணஸ்வாமி முதலியார் தமது தலைமையுரையில் கூறியதாவது :—

இன்று நம் நாட்டின் கல்வி பிரச்னைகள் ஏராளமானவை. மாறு பட்டவை. அத்துடன் சிக்கல் நிறைந்தவை. அரை நூற்றுண்டுக்கு முன்பிருந்த கல்வியுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்நாட்டிலாகட்டும் அல்லது உலகின் வேறு எந்த நாட்டிலாகட்டும் மக்களை எதிர் நோக்கியுள்ள பிரச்னை கல்வி என்பதை உணர்வார்கள். இனி அதை ஒரு சிலரின் உரிமை என்று நினைப்பதற்கில்லை. சகலருக்கும் கல்வியளிக்கும் இந்த பிரச்னையில் கணிசமான அளவினருக்கு மேல் படிப்பு அளிக்கப்பட்டு மக்களிடையே கல்வியைப் பரப்புவது அவர்கள் கடமை என்பதையும் உணர வேண்டும். ஆகவே செகண்டரி கல்விக்கும் மேல் படிப்புக்குமிடையே சம்பந்தமிருக்கிறது என்பதை அசட்டை செய்யக்கூடாது.

### நாட்டு நலனும் இருக்கிறது

கல்வியானது தனிப்பட்டவர்களுக்கு நன்மையை அளிப்பதோடில்லாமல் சமூகத்தினுடையவும் தேசத்தினுடையவும் தேவைக்கு உதவி செய்வதாக இருக்க வேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட வயது வரை ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி யளிக்கப்பட்டு அதற்குப் பிறகு அவர்களுக்குத் தகுதியான துறைகளில் பயிற்சி பெறலாம் என்பது சரியன்று. இந்தப் பருவத்தில், ஒரு விஷயத்தை மட்டும் தெரிந்து கொள்கிற படிப்பு எல்லா மாணவர்களினுடைய தேவையையும் பூர்த்தி செய்யாது. இதை மனதிற்கொண்டுதான் செகண்டரி கல்வி கமிஷன் சிபார்சுகள் செய்யப்பட்டிருகின்றன.

### வேலையில்லாத் திண்டாட்டம்

தற்போதைய கல்வி முறை நீடிக்குமானால் நாட்டில் படித்தவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னைக்குப் பரிகாரம் காண்பதிலுள்ள சிரமத்தை, மேலும் அதிகரிக்கத்தான் செய்து விடும். நாட்டில் படித்த இளைஞர்களிடையே வேலை கிடைக்காததனால் உள்ள சோர்வும் ஏமாற்றமும் சமுதாயத்தின் சமூக நலத்துக்கு விரோதமான போக்கில் இறங்கச் செய்துவிடும். இந்தப் பிரச்னைதான் இளைஞர்களை உபயோகமுள்ள பிரஜைகளாகச் செய்வதற்கனுகுணமான வழியில், புது முறையில் கல்வியைப் புகுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கான யோசனைகளைக் கூற இரு கல்வி கமிஷன்கள் நியமிக்கப் படுவதற்குக் காரணமாயிற்று.

### பாஷைப் பிரச்னை

அவசரமான பரிகாரம் காண்பதற்கான பல பிரச்னைகள் இருக்கும் சமயத்தில் இந்தப் பாஷைப் பிரச்னை தோன்றியிருப்பது துரதிருஷ்டமேயாகும். மக்களிடையே அறிவைப் பரப்புவதற்கு அந்நிய பாஷையை உபயோகிப்பது சரியான முறை இல்லைதான். ஆனால் கல்வியின் கட்டத்தை மனதிற் கொண்டு பாஷை பிரச்னை கவனிக்கப்பட வேண்டும். ஆரம்பக் கட்டத்தில் போதன பாஷை தாய் பாஷையாகவே இருப்பதுதான் சிறந்தது என்பது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும். செகண்டரி கட்டத்துக்கும் இது பொருந்தலாம். ஆனால் மேல் படிப்பு பிரச்னை வரும்போது எந்த வழியில் விஷய ஞானத்தைப் பெறுவதென்பது பாஷைப் பிரச்னையைப் போலவே முக்கியமானதாகும்.

### ஆங்கிலத்தின் அவசியம்

இந்தச் சந்தர்ப்பத்தில் டாக்டர் முதலியார் ஆங்கில பாஷை சர்வதேச பாஷையாக இருக்கும் அதன் முக்கியத்தைக் குறிப்பிட்டு விட்டுப் பேசியதாவது :

விஞ்ஞானம், தொழில் நுணுக்க அறிவு ஊட்டும் நூல்கள் ஏராளமாக ஆங்கிலத்தில் தான் இருக்கின்றன. எந்தத் துறையிலும் உயர்தரக் கல்வி பெறுவதற்கு ஆங்கிலம் முக்கியமான சாதனம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆங்கில பாஷையிலுள்ள நூல்களை தாய் பாஷையில் மொழி பெயர்ப்பதன்மூலம் ஆங்கிலத்தை அகற்றி

விடலாமென்று கூறுவது கார்யசாத்யமல்ல. இதுவரை தாய்பாஷையில் மொழிபெயர்க்க எத்தனையோ தடவைகள் முயற்சிகள் நடந்திருக்கின்றன. ஆனால் மூல நூல்களிலுள்ள ஜீவகளை மொழிபெயர்ப்பில் ஏற்படவில்லை. படிப்படியாகவும் நீண்டகால முயற்சியாலுமே பிரதேச பாஷைகள் மூலம் உயர்தரக் கல்வியை போதிக்க முடியும். அது நீண்ட கால திட்டமாகத் தான் அமையமுடியும். ஆகவே ஆவேசமானப் பிரசாரங்களால் அந்த லட்சியத்தைத் துரிதமாக சாதித்து விட முடியாது. இன்னும் சிறிது காலத்துக்கு தாய்மொழி மூலமாக உயர்தரக் கல்வியைப் போதிப்பது சாத்யமல்ல.

ஆங்கிலத்தை உடனே ஒழித்து விட வேண்டுமென்று கூறுவது குறுகிய போக்குடன் கூறப்படும் காரிய சாத்யமற்ற யோசனையாகும்.

கல்வித் துறையில் அரசியல் ஆதிக்கத்திலுள்ளவர்கள் தலையிடுவது தான் பெரிய சிரமமாக இருக்கிறது.

கல்விப் பிரச்னைகள் பற்றி போதுமான அவகாசமோ சந்தர்ப்பமோ அவர்களுக்குக் கிடையாது. கல்வித் துறையில் திடீர் மாறுதல்கள் செய்வதால் ஏற்படக் கூடிய அபாயங்களையும் அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. அரசியல் ஆதிக்கத்திலுள்ளவர்களின் கட்டளைகளின்படி கல்வி சீர்திருத்தத்தின் போக்கு, அமைக்கப்பட்டால் பெரிய ஆபத்தான விளைவுகள் ஏற்படும். அதனால் கல்விக்கு மட்டுமின்றி நாட்டின் முன்னேற்றத்துக்கும் பல வழிகளில் ஆபத்து ஏற்படும். கல்விப் பிரச்னைகளில் உபாத்தியாயர்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படையாக தெரிவிக்கத் தயங்கக்கூடாது. ஆனால் கருத்துக்களை கோபத்துக்கும் இடம் தராமல் அடக்கமாகவும் அரசியல் சர்ச்சைகளில் ஈடுபடாமலும் தெரிவிக்கவேண்டும். சர்ச்சைகளினால் ஒலிக்கும் பதில் தாபமே ஏற்படும்.

## கல்வித் தரம்

ஆரம்பக்கல்வி பெறவேண்டியவர்களின் தொகை அதிகரித்து விட்டபடியால் சில சமயங்களில் கல்வித் தரத்தை ஓரளவு குறைக்கவேண்டியிருக்கலாம். ஆனால் தரம் மிகவும் குறைந்து விட்டால் கல்வியின் நோக்கமே முறியடிக்கப்பட்டு விடும். ஆரம்பக்கல்வி போதிப்பது சுலபமான விஷயமென்று கருதி அரைகுறை படிப்புள்ளவரை ஆசிரியர்களாக நியமித்து விடலாமென்ற எண்ணம் தவறானது. ஆரம்பக்கல்வி தான் சிறுவர்களின் எதிர் கால முன்னேற்றத்துக்கு ஜீவநாடி. ஆகவே நல்ல யோக்யதாம்சம் பெற்றவர்களையே ஆரம்பக்கல்வி உபாத்தியாயர்களாக நியமிக்க வேண்டும்

உபாத்தியாயர்களுக்கு உற்சாகம் ஏற்பட வேண்டுமானால் அவர்களுக்கு ஓரளவு சுதந்திரமளிப்பதவசியம்.

பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயர்களின் பொறுப்பு முக்யமானது. அவர்கள் உபாத்தியார்களுக்கும் மாணவர்களுக்கும் நண்பராகவும் உபதேசகராகவும் வழிகாட்டியாகவும் இருப்பதவசியம். பள்ளிக்கூடத்துக்குப்புறம்பான வேளையிலும் மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும்.

சரீர உழைப்பின் பெருமையை மாணவர்கள் உணரும்படி செய்ய வேண்டும்.

பள்ளிக்கூடங்களில் நடக்கும் வேலைகளுக்கு விளம்பரம் வேண்டுமென்று ஆசைப்படக்கூடாது. விளம்பரம் கிடைக்குமென்று தெரிந்தாலொழிய உற்சாக மேற்படாமற் போய்விடும். ஆகவே, விளம்பரப் பித்தை விட்டொழிக்க வேண்டும். இந்தியாவைப்போல் நான் கண்ட எந்த அயல் நாட்டிலும் பள்ளிக்கூட நிகழ்ச்சிகள் பற்றி பத்திரிகைகளில் இவ்வளவு ஏராளமாக செய்திகள் வருவதில்லை.

பள்ளிக்கூடங்களில் பிரசங்கம் செய்ய கண்டவர்களை அழைக்கக் கூடாது. அரசியல் சர்ச்சைக்கிடமான பேச்சுகளிலும் வேலைகளிலும் கல்வி ஸ்தாபனங்கள் ஈடுபடக் கூடாது.

## சரீர உழைப்பின் பெருமை

மாணவரிடையே சரீர உழைப்பின் பெருமையையும் தொண்டு மனப்பான்மையையும் புகட்ட வேண்டும். ஒருவாரம் அல்லது 2 வாரங்கள் மாணவர்களை வேலை முகாம்களுக்கு அழைத்துச் சென்று விளம்பரப் படுத்துவது அதற்கு வழியல்ல. சிறு பிராயத்திலிருந்தே அத்தகைய மனப்பான்மையை ஊட்டவேண்டும். பள்ளிக்கூடங்களை சுத்தம் செய்தல், தோட்டங்களுக்கு

தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற வேலைகளில் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

### உரிமை சாசனம் தயாரிக்கவேண்டும்

உபாத்தியாயர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்றும் உத்யோக சீர்திருத்தம் வேண்டுமென்றும் வற்புறுத்தி அக்ராசனர் சொன்னதாவது: செகண்டரி கல்வி கமிஷன் சிபாரிசுகள் தாராளமாக இல்லாவிட்டாலும் இப்போதைக்கு அந்த சிபாரிசுகளைப் பின்பற்றலாம். ஆசிரியர்களின் நிலைமையை உயர்த்துவதில் காலதாமதம் செய்தால் நாட்டின் முன்னேற்றம் தடைபடும்.

உத்தியோகத்தில் ஸ்திரத்தன்மை, உரிமைகளுக்கு பிறர் தலையீட்டிலிருந்து பாதுகாப்பு, பழிவாங்கும் நடவடிக்கைகளை எதிர்த்து அடபீல் செய்துகொள்ள வசதி போன்றவைகளை வரையறுத்து உபாத்தியாயர்களின் உரிமை சாசனம் தயாரிக்க வேண்டும்.

---


**ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்**

**நமது தாய்மொழி வாசகம்**

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

| | | | அ. | பை |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | 5 | 0 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | .... | 6 | 0 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | 7 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | 7 | 6 |

எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

**கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு**

ஆசிரியர் S. ஜகந்நாதன்
(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ்,
சைதாப்பேட்டை, சென்னை)
J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M. Ed. திருத்தியமைத்தது

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் | (முதல் வகுப்பு) | .... | அணா | 5 |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | .... | ,, | 6 |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | .... | ,, | 10 |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | .... | ,, | 13 |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | .... | ,, | 14 |

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# ஆரம்பக் கல்வி மகாநாடு

தஞ்சையில் சங்கீத மஹாலில் மே மாதம் 27-ம் தேதி ஆரம்பக் கல்வி ஆதாரக் கல்வி பிரச்னைகளைப் பற்றி விவாதம் நடைபெற்றது. மகாநாட்டிற்கு கோவை பீளமேடு சர்வஜன உயர்நிலைபபள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்த ஸ்ரீ ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார் தலைமை வகித்தார்.

அவர்தம் தலைமையுரையில் ஆதாரக் கல்வித் திட்டததில், குழந்தையின ஒழுக்கம், உள்ளம் இவற்றை அபிவிருததி செய்வதிலும், சுகாதார முறைகளில் பயிற்சி அளிப்பதிலும், கைத்திறனை வளர்ப்பதிலும் ஆசிரியர்களுக்கு அதிக பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது என்றும், ஆசிரியர்கள் சிறுவர்களுக்கு ஒரு தொழிலின் வழியாகக் கல்வி கற்பிககும்போது தம் போதனாதிறனைக் காட்ட முடியும் என்றும், புத்தகப் படிப்பு மட்டும் நமது சூழ்நிலையில் நிறைவுள்ளதாகாது என்றும் கூறினார்.

ஆனால் புதிய கல்வித்திட்டத்தில் இந்த அம்சங்கள் காணப்படவில்லை என்று குறிப்பிட்டார். பள்ளி ஆசிரியர் தனது வகுப்பு அறையில் ஆறு மணி நேரம் அடைபட்டுக் கிடக்கிறார். இவ்வாறு வாரத்தில் ஆறு நாட்கள் அடைப்பட்டுக் கிடப்பதுடன், ஒவ்வொரு நாளும் ஒரே பாடத்தை இரண்டு முறை கற்பிக்க வேண்டியுள்ளது; ஆகையால் பள்ளிக்கு வெளியில் குழந்தைகள் செய்யும் தொழிலை பார்வையிடக்கூட முடியாத நிலைமையில் இருக்கிறார்; ஆதலால் ஆதாரக் கல்வியும் புதுமுறைக் கல்வித் திட்டமும் வெகு அளவில் மாறுபட்டவை என்று தாம் எண்ணுவதாகக் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் ஆதாரக் கல்வித திட்டம் மேலைநாட்டுச் சிந்தனையாளர்களையும் ஈர்த்துவிட்டது; ஆதாரக் கல்வியின் அமைப்பு முதலாவதாக குழந்தையின் உடல், உள்ளம, சூழ்நிலை முதலியவற்றைச் சார்ந்துள்ளதாகவும் இரண்டாவதாக செய்கையின் மூலம் கற்றுக்கொள்ளும் சாதகம் கொண்டதாகவும், மூன்றாவதாக அனைவருக்கும் கல்வி அளிக்கும் தன்மையைக் கொண்டதாகவும் உளது என்று சொன்னார்.

இந்திய சர்க்கார் ஆதாரக் கல்வியை ராஜ்யங்களுக்கு சிபார்சு செய்துள்ளபோதிலும், அதன் அபிவிருத்தி மிகவும் குறைவாகவே காணப்படுகிறது என்று குறிப்பிட்டு விட்டு, ஆரம்பப் பள்ளிக்கூடங்களை ஆதாரக் கல்விப் பள்ளிகளாக மாற்றுவதை விட, சர்க்கார் புதிய ஆதாரக் கல்விப் பள்ளிகளை நிறுவ வேண்டும் என்றும், அத்துடன் இலவச ஆரம்பக் கல்வியை அமல் நடத்த வேண்டும் என்றும், அனைவருககும் கல்வி அளிக்க வசதி செய்தல் வேண்டும் என்றும் கூறினார்.

சென்னை அடையாறு ஔவை விடுதியின் தலைவர் ஸ்ரீமதி சரஸ்வதி ஸ்ரீனிவாசன் விவாதத்தை ஆரம்பித்து வைக்கையில், சர்க்கார் சென்ற மகாநாட்டின் சிபார்சுகளைக் கவனித்து ஆராயவில்லை என்றும், ஆதாரக் கல்வி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வழியாகும் என்றும் கூறினார்.

தென் இந்திய ஆசிரியர் சங்கத் தலைவர் ஸ்ரீ எஸ். நடராஜன் பேசுகையில், தற்சமயம் உள்ள ஆரம்பக் கல்வித் திட்டம் சமூகத்திற்கும், ஆசிரியர்களுக்கும் பயனளிக்காது என்று எல்லோரும் உணர்வதால் காந்தியடிகளின் ஆதாரக் கல்வித் திட்டத்தை அமல் நடத்த வேண்டும் என்று சொன்னார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீ கே. அருணாசலம் பேசுகையில் ஆதாரக் கல்வி குழந்தையின் அன்றாட வேலைகளுடனும் வாழ்க்கையுடனும் இணைந்திருக்கிறது என்றார்.

எல்லாப் பள்ளிகளிலும் ஆதாரக் கல்வியை அமல் நடத்துமாறு மன்னார்குடி ஸ்ரீ என். எஸ். வெங்கடேஸ்வரன் வேண்டினார்.

குமாரி ராஜேந்திரன், ஸ்ரீ சுந்தரம் முதலியோர்கள் பாடப்புத்தகங்கள் இன்றி எவ்வாறு ஆதாரக் கல்வியை அமல் நடத்துவது என்று விளக்கினார்கள்.

ஸ்ரீமதி சரஸ்வதி ஸ்ரீனிவாசன் வந்தனோபசாரம் கூற மகாநாடு இனிது முடிவுற்றது.

# ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம், கல்வி மந்திரி, பேச்சின் சுருக்கம்

ராஜ்யக் கல்வி மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் அவர்கள் கல்வி முறையில் ஏதாவது மாறுதல் செய்தால் அதனால் லட்சக் கணக்கான குழந்தைகள் பாதிக்கப்படுவர் என்றும், அரசியல் நோக்கமில்லாமல், விருப்பு வெறுப்பின்றிக் கல்வித் துறையில் மாறுதல்களை ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும் என்றும், கல்வி நிபுணர்களின் ஒத்துழைப்புடன் அம்மாறுதல்களைச் செய்யவேண்டும் என்றும் கூறினார்.

தற்போது இந்த ராஜ்யத்தில் அனுஷ்டிக்கப்படும் கல்வி முறையில் தீவிர மாறுதலைச் செய்வது அவசியம் என்றும் சர்க்கார் உத்தியோகத்துக்கு மக்களைத் தயார் செய்வதே தற்போதுள்ள கல்வி முறையின் நோக்கமாகும் என்றும் குறிப்பிட்டார்.

சமீபத்தில் கைவிடப்பட்ட புதிய கல்வி திட்டத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கையில் இத்திட்டம் நன்றாக இருந்தபோதிலும் அதை மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை என்றும், ஏனெனில் அதை அமுல் நடத்துவதற்குமுன் மக்களோடு கலந்து ஆலோசிக்கவில்லை என்றும் இது தான் ஜனநாயகம் என்றும் தாம் வருத்தப்படுவதற்கு இல்லை என்றும் கூறினார்.

ஆசிரியர்களுடைய சம்பளம், சேவை நிலைபற்றி மந்திரி குறிப்பிடுகையில், ஆசிரியர்களது, குறிப்பாக ஆரம்ப ஆசிரியர்களது, சம்பளத்தை அதிகரிப்பது சாத்தியமல்ல என்றும், அதற்கு ஆகும் செலவைப் பொது மக்கள் பகிர்ந்துகொள்ள முன் வந்தாலொழிய இவ்விஷயத்தில் கணிசமான அபிவிருத்தி ஏற்படும் என்று தாம் கருதவில்லை என்றும் கூறினார்.

ஆரம்பக் கல்வியின் அவசியத்தைப் பற்றி மந்திரி வற்புறுத்திப் பேசுகையில், ஆரம்பக் கல்வியில்லாமல் செகண்டரி, கல்லூரி கல்வி வளர்ச்சியடைய முடியாது என்றும், சுதந்தர இந்தியாவிற்கு ஏற்ற கல்விமுறை ஒன்றை வகுக்க ஆசிரியர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

தாம் கல்வி மந்திரியாக இருக்கும் வரை ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் கல்விக்காகப் பாடுபடப் போவதாகவும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பின்றி எந்த கல்வித் திட்டமும் வெற்றிகரமாக நிறைவேற்றப்படமுடியாது என்றும் கூறினார்.

பிறகு தென் இந்திய ஆசிரியர்களின் யூனியன் செய்துவரும் சேவையைப் பாராட்டி மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

(1) பிராவிடெண்ட் நிதியை சர்க்காரே வைத்துக்கொண்டு ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் வட்டி விகிதம் அதற்கு அளிக்க வேண்டுமென்று இம்மகாநாடு ராஜ்ய சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது. சர்க்கார் உதவி பெறும் பள்ளிகளில் பிராவிடெண்ட் நிதிக்கு ஆசிரியர்கள் ரூபாய்க்கு $2\frac{1}{2}$ அணு பங்கு செலுத்த உத்தரவு ரத்து செய்யப்பட்டது குறித்து மகாநாடு வருந்துகிறது. இவ்வுத்தரவை மீண்டும் நிறைவேற்றுமாறு சர்க்காரை இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

(2) தாங்கள் செலுத்தும் பங்கில் ஒரு பகுதியை இன்ஷூரன்ஸ் பிரிமியம் கட்ட உதவியாகவும், பிராவிடெண்ட் நிதிக் கணக்குகளைத் தாமதமாகத் தீர்க்கவும் ஒவ்வொரு வருட முடிவிலும் சர்க்கார் தன் பங்கைச் செலுத்த வேண்டுமென்று மகாநாடு கருதுகிறது.

(3) வயோதிக காலத்திற்கு பிராவிடெண்ட் நிதி போதாமலிருப்பதால் எய்டட் பள்ளி நிர்வாகிகள் தங்கள் பங்கை அதிகரிக்க வேண்டுமென்று மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

(4) ஸ்தல ஸ்தாபனங்கள், எய்டட் பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு சர்க்கார் பென்ஷன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. சில நிர்வாகங்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு பென்ஷன் அளிப்பது குறித்து மகாநாடு நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் எல்லா நிர்வாகங்களும் பென்ஷன் அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

(5) ஒவ்வொரு ஆசிரியரும் இன்ஷூரன்ஸ் பாலிஸி எடுத்துக்கொள்ள, சர்க்கார் கட்டாயப்படுத்துமாறு மகாநாடு கோருகிறது.

(6) மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு கொடுக்கப்படும் விகிதத்தில் எல்லா ஆசிரியர்களுக்கும் பஞ்சப்படியும் வீட்டு வாடகைப்படியும் கொடுக்க வேண்டுமென்று மகாநாடு மீண்டும் வற்புறுத்துகிறது.

(7) ஆசிரியர்கள் ரிடயர் ஆகும் வயதை 60 என்று நிர்ணயிக்க வேண்டும்.

(8) செகண்டரி கல்வி கமிஷன் சிபார்சுப்படி ஹைஸ்கூல் படிப்பை 7 வருடங்களுக்கு விஸ்தரிக்குமாறு மகாநாடு சிபார்சு செய்கிறது.

(9) சாத்தியமான விடங்களில் பல காரியப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் இத்தகைய பள்ளிகளை ஆரம்பிக்க மத்திய, ராஜ்ய சர்க்கார்கள் தாராளமாக மான்யம் அளிக்க வேண்டுமென்றும் மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(10) பயிற்சி கலாசாலைகளும் யூனிவர்ஸிடிகளும் முக்கிய பாடங்களில் மறுபயிற்சிக்கும் குறுகிய கால தீவிரப் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(11) ஆசிரியர்கள் பயிற்சிக்கு தற்போதுள்ள வசதிகள் போதாதென்றும், ஆகவே புது பயிற்சி கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் இத்தகைய கல்லூரிகளை ஆரம்பிக்க தனி நபர்களுக்கு சர்க்கார் உதவி அளிக்க வேண்டுமென்றும் மகாநாடு கருதுகிறது. கிராமங்களிலுள்ள திறந்த வெளிகளை குழந்தைகள் விளையாடுவதற்காக நிறுத்தி வைக்கவேண்டும்.

(12) இம்மகாநாடு, தற்போது அளித்திருக்கும் சம்பளச் சலுகையை காலேஜ் ஆசிரியர் குழந்தைகளுக்கும், பள்ளிக்கூட வேலைக்காரர் குழந்தைகளுக்கும் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

(13) 750 மாணவர்களுக்கு மேல் படிக்கும் பள்ளிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குமாஸ்தாக்கள் அப்பர் டிவிஷன் விகிதத்தில் நியமிக்கப்படவேண்டும்.

(14) எல்லா செகண்டரி பள்ளிகளிலும் பயிற்சி பெற்ற லைப்ராரியன்கள் நியமிக்கப்பட வேண்டும். பயிற்சி கல்லூரியில் எல்லா ஆசிரியர்களுக்கும் நூல்நிலைய வேலைபற்றி முக்கியமான விஷயங்கள் போதிக்கப்பட வேண்டும்.

(15) கட்டணம் வசூலிக்காத பயிற்சி கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவு பூராவையும் சர்க்கார் ஏற்க வேண்டுமென்று மகாநாடு கருதுகிறது.

(16) 14 வயது வரை எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசமாகக் கட்டாயக் கல்வி அளிக்க அரசியல் சட்ட 45-வது ஷரத்து வகை செய்யப்பட்டிருப்பதால், ஆரம்பக் கல்வி பிரச்னைகளை ஜாக்கிரதையாகப் பரிசீலிக்க விசேஷக் கமிஷன் ஒன்றை நியமிக்குமாறு மகாநாடு இந்திய சர்க்காருக்கு யோசனை கூறுகிறது. தேசிய விஸ்தரிப்பு சர்விஸ் திட்டத்தில் ஆரம்பக் கல்வி விஸ்தரிப்பையும் சேர்க்க வேண்டுமென்றும் ஆரம்பக் கல்விக்கு ஆகும் செலவுக்காக ராஜ்ய சர்க்கார்களுக்கு தாராளமாக நிதி உதவி அளிக்குமாறும் மகாநாடு மத்திய சர்க்காரை வற்புறுத்துகிறது.

(17) உபரி சம்பளம் (Special fees) சம்பந்தப்பட்ட சர்க்கார் விதிகள் மிகவும் கடுமையாக இருக்கின்றன. இதனால் செயற்கைப் பாடங்கள் நடத்தவேண்டி செலவுகளைச் செய்ய தலைமை ஆசிரியர்களுக்குக் கஷ்டமாய் இருக்கிறது. ஆகையால் பையன்களுடைய நன்மையை உத்தேசித்து செயற்கைப் பாடங்களை நிம்மதியாக நடத்த வசதியளிக்கும்படி விதிகளை மாற்றியமைக்குமாறு இம்மகாநாடு சர்க்காரை வேண்டிக்கொள்ளுகிறது.

(18) சமீபத்தில் விடுத்துள்ள சர்க்கார் உத்தரவு (G. O. No. 1557, Edn., dated 30-6-1953)ப்படி சட்ட சபைத் தேர்தல்களில் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் உரிமை அளித்ததில் இம்மகாநாடு சந்தோஷமடைவதோடு, ஆசிரியர்கள் தேர்தலுக்கு நிற்கமுடியாதபடி நிபந்தனைகளை விதித்திருப்பதுபற்றி வருந்துகிறது. ஆகையால், நிபந்தனைகளை நீக்கி 1940ல் விடுத்துள்ள சர்க்கார் உத்தரவு (G. O. No. 664, Edn. dated 15-4-1940) ஆரம்ப ஆசிரியர்களுக்கும் சாரும்படி செய்யுமாறு சர்க்காரை வேண்டிக்கொள்ளுகிறது.

(19) திருத்தப்பட்ட கல்வி இலாகா விதிகள் 98(b)யையும் 154யும் பரிசீலித்துப் பார்த்து, இம்மகாநாடு, ஆசிரியர்-மானே

ஜர் ஒப்பந்தத்திற்கு முரண்பாடான தென்றும், கல்வி அதிகாரிகளுக்கு விசேஷ அதிகாரம் கொடுத்திருப்பதால் எந்த விஷயத்தையும் 'கவனக்குறைவு (Negligence)', 'ஒழுங்கின்மை (Irregularity)' என்பவைகளின் கீழ் கொண்டுவரக் கூடும் என்றும், ஆசிரியர்களுக்கு அப்பீல் செய்ய வசதி இல்லை என்றும், ஆசிரியர்கள் நிம்மதியான மனதோடு வேலைசெய்ய முடியாதென்றும் கருதி, இத்திருத்தங்களை நிறுத்திவைத்து, தீர ஆலோசிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறது.

(20) சர்வ கலாசாலைகளிலும், பயிற்சி கல்லூரிகளிலும் கல்வியில் ஆராய்ச்சி நடத்த வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் ஆராய்ச்சி நடத்தும் ஸ்தாபனத்திற்கு உதவி அளிக்க வேண்டுமென்றும் மகாநாடு கருதுகிறது. சீக்கிரமே தென் இந்திய ஆசிரியர்கள் சங்கக் கல்வி ஆராய்ச்சிக் குழுவை ஏற்படுத்துமாறு அச் சங்கத்தை மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(21) முன் மகாநாடுகளில் சம்பளத் திட்டத்தைப்பற்றிய தீர்மானத்தை மறுபடியும் பிரேரேபிப்பதோடு, பல கிரேடு ஆசிரியர்களின் அதிருப்தியையும் சர்க்கார் கவனத்துக்கு இம்மகாநாடு கொண்டுவருகிறது. மத்திய கல்வி அட்வைசரி போர்டும், செகண்டரி கல்வி கமிஷனும் ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கின்றன. மேலும் செகண்டரி கல்வி கமிஷன், ஒரேவிதமான படிப்பும் பொறுப்பும் உள்ள ஆசிரியர்களுக்கு எந்த ஸ்தாபனத்தின் கீழ் வேலை செய்தாலும் சம்பளத்தில் வித்தியாசம் இருக்கக்கூடாது என்று சுட்டிக்காட்டி இருக்கிறது. ஆகையால், 42வது மாகாணக் கல்வி மகாநாட்டில் சிபார்சு செய்த கீழ்க்கண்ட சம்பளத் திட்டத்தை அனுசரிக்குமாறு சர்க்காரை இம்மகாநாடு வற்புறுத்துகிறது :—

காலேஜ்

| | |
|---|---|
| பிரின்ஸிபால் | ரூ. 600—25—800 |
| புரொபஸர்கள் | ரூ. 300—20—600 |
| லெக்சரர்கள் | ரூ. 200—10—350 |
| டெமான்ஸ்ட்ரேடர்கள் | ரூ. 100—10—200 |

(முதல் அல்லது இரண்டாவது வகுப்பு ஆன்ர்ஸ் பட்டதாரிகளுக்கு ரூ. 20 அலவன்ஸ் கொடுக்கவும்)

ஹைஸ்கூல்கள்

| | |
|---|---|
| ஹெட்மாஸ்டர்கள் | ரூ. 250—15—400 |
| உதவிகள் கிரேடு-A | ரூ. 100—10—300 |

(B. Ed., B. T., அல்லது L. T., ஸ்பெஷல் ஆசிரியர்களும், ஹைஸ்கூலில் போதிப்பதற்கான யோக்யதாம்சம் உள்ளவர்கள்)

| | |
|---|---|
| கிரேடு-B | ரூ. 70—5—150 |

(செகண்டரி பாடசாலைகளில் I—III படிவங்களுக்கும், ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளில் VI—VIII வகுப்புக்களுக்கும் போதிக்கும் யோக்யதாம்சமுள்ள செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்.)

(இண்டர் மீடியட்பாஸ்போல உயர்தர யோக்யதையுள்ளவர்களுக்கு ரூ. 10 அலவன்ஸ் கொடுக்கவேண்டும்.)

| | |
|---|---|
| கிரேடு-C | ரூ. 50—2—90 |

(ஆரம்ப பாடசாலைகளில் I—V வகுப்புக்களுக்குப் போதிக்கும் யோக்யதாம்சமுள்ள ஹையர் கிரேடு பயிற்சிபெற்ற ஆசிரியர்களும் மற்றோரும்.)

பெரிய பாடசாலைகளில் இரண்டு காரணங்களுக்காக பொறுப்பேற்கும் ஸ்தானங்கள் உண்டாக்க வேண்டும் :—

(1) பிரின்ஸிபாலுக்கும், ஹெட்மாஸ்டருக்கும் அவர்களுடைய பொறுப்பான தினசரி ஆபீஸ் வேலைகளில் ஒரு பகுதியை நிவர்த்திப்பதற்காக.

(2) மிகவும் ஆதாரமுள்ள ஆசியர்களுக்கு ஒரு தூண்டுகோலாக இருக்கும் பொருட்டு. இந்த ஸ்தானங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு அவர்கள் சம்பளம் தவிர அலவன்ஸ் கொடுக்கவும்.

# செய்தித் திரட்டு

(1) திருச்சி ஜில்லா லேபர் ஆசிரியர் யூனியன்.

29-4-'54ல் இந்த யூனியன் சார்பில், யூனியன் தலைவர், ஜில்லா பொதுக் காரியதரிசி, உதவிக் காரியதரிசி ஆகியவர்களால், சென்னை ராஜ்ய ஹரிஜன் நல இலாகா டைரக்டர் உயர்திரு R. S. மலையப்பன் I. A. S. அவர்களைப் பேட்டிக்காணப்பட்டது. (உடன் திருச்சி ஜிலலா நல அதிகாரி அவர்களும், முசிரி தாலூகா ஹரிஜன் நல இன்ஸ்பெக்டர் அவர்களும் வீற்றிருந்தனர்) அவ்வமயம் மாவட்ட பொதுக் காரியதரிசி அவர்களால், திருச்சி ஜில்லா நல அதிகாரி அவர்களது உத்தரவு டைரக்டர் அவர்களிடம் காட்டப்பட்டு விவாதிக்கப்பட்டது. யூனியன் அங்கோர விஷயமாக Proceedings of the Director of Public Instruction, Madras. R. C. No. 192—B 1 (2)—52 Dated 10-10-1952 உத்தரவும் காண்பிக்கப்பட்டது.

மேலும் கடந்த ஆறுண்டுகாலமாகவே கேட்டுக்கொண்டு வந்தும் இன்னும் சம்பள பாக்கி (arrears of pay) கிடைக்கவில்லையாதலால், ஒரு பிரத்தியேக குமாஸ்தாவை நியமித்து விரைவில் பட்டுவாடா செய்யும்படியும், சம்பள பில் காலா காலத்தில் அனுப்பியும் சம்பளம் காலதாமதமாக கிடைக்கிறதென்றும், மாற்றப்படும் ஆசிரியர்களுக்கு பிரயாணப் படி கிடைப்பதில்லையென்றும், சாதல்வார் தொகை கூட்டியளிக்கப்படவேண்டுமென்றும், வீட்டலவன்ஸ் தேவை என்றும், தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தாரால் வெளியிடப்படும் 'பாலர் கல்வி' இதழ் எல்லா பள்ளிகளுக்கும் கிடைக்க உரிய சந்தாவைக் கட்டி உதவும்படியும், மதிய உணவு பணமும் தாமதித்துக் கிடைக்கிறதென்றும், மற்றும் உரிய சகல குறைபாடுகள் விஷயமாகவும் எடுத்துக்கூறப்பட்டது; எழுதியும் கொடுக்கப்பட்டது. விரைவில் ஓர் மாநாடு நடத்த இருப்பதாகவும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

டைரக்டர் அவர்கள் மேலே கண்ட குறைபாடுகள் ஒவ்வொன்றின் விஷயமாகவும் நல அதிகாரி அவர்களிடம் நேரில் கேட்டதுடன் அதிவிரைவில் இக்குறைகளைக்களைந்து ஆசிரியர்களுக்கு ஆவன புரியும்படியும் தெரிவித்தார்கள். வீட்டலவன்ஸ் விஷயமாக தாம் தக்க நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் தெரிவித்தார்கள். முடிவில் யூனியன் சார்பில் வணக்கமும் நன்றியும் செலுத்திவழியனுப்பிவைக்கப்பட்டது.

(2) ஸ்ரீலக்ஷ்மி நாராயண ஆரம்பப் பாடசாலை, பரனூர்.

30-4-54ல், இப்பாடசாலையின் ஆண்டு விழா திருக்கோவிலூர் வட்டம் கல்வித் தணிக்கையாளர் ஸ்ரீ G. கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்வூரிலுள்ள பெற்றோர்களும் தாய்மார்களும் ஆஜராயிருந்தனர்.

கடவுள் வணக்கத்திற்குப்பின் தலைவர் முன்னுரையில் "கல்வியின் அவசியமும் பெற்றோரின் ஒத்துழைப்பும்" என்பது பற்றி ஆணித்தரமாக ஆழ்ந்து மனதில் பதியும்படி விளக்கினார்.

தலைவர் மேலும் கூறுகையில் கல்வியறிவு அவசியமென்றும் அதனால் பக்தி உண்டாகுமென்றும் ஆகையால் கல்விக்கும் பக்திக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் முறையே பாடசாலையும் கோவிலும் மிக்க அவசியமென்றும் கூறினார்.

பள்ளிப்பிள்ளைகள் பல வேடிக்கைகள் (நடனம், நாடகம்) நடத்திக் காட்டினர்.

தலைமை ஆசிரியர் தலைவருக்கும் பெற்றோருக்கும் மற்றோருக்கும் வந்தனம் கூறினார்.

(3) இராமானுஜ இந்து ஆரம்பப் பள்ளி, ஒட்டநத்தம்.

30-4-54ல் மாணவர் சங்க ஆண்டு விழா கிராமோதய காதி சங்கத் தலைவர் திரு. வெ. சு. இராம சுப்பு அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் சங்கீதம், நூல் நூற்புப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், சிறுவர் சிறுமியர்களனைவருக்கும் மிட்டாய்களும் வழங்கிய பின் தலைமை ஆசிரியர் திரு. A. கணபதியவர்களால் நன்றிகூற தேச வாழ்த்து 'வாழிய செந்தமிழ்' பாடி கூட்டம் இனிது கலைந்தது.

(4) போர்டு எலிமெண்டரி ஆண் பாடசாலை, கண்டாச்சிபுரம்.

2-5-54ல் மாணவர் பெற்றோர் சங்க ஆண்டு விழா, திருக்கோவிலூர் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு. வெங்கட சுப்ரமண்ய ஐயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் மயிலம் தமிழ்க்கல்லூரி விரிவுரையாளர் வித்துவான் திரு. சிவசுப்ரமண்யனார் அவர்கள் "சிறந்த பண்பு" என்னும் பொருள் பற்றியும், திருக்கோவலூர் தமிழ்ப்பண்டிதர், வித்துவான் திரு. விருத்தகாசி அவர்கள் "கடமை" என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

இரவு பள்ளி மாணவிகள், முதியோர் கல்வி பயில்வோர் இவர்களால் உரையாடலும், மாணவர்களால் "கட்ட பொம்மன்" என்னும் நாடகமும் நடத்திக் காண்பிக்கப் பட்டது.

திரு. ப. கிருஷ்ணசாமி ஐயர் நன்றியுரைக்குப் பின் தேசிய வாழ்த்துடன் இனிது முடிவுற்றது.

(5) போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலை, அனந்தபுரம்.

8-4-54ல் தென்னுற்காடு ஜில்லா போர்டின் நிர்வாகத்தின் கீழ் (பெண்கள்) முதியோர் கல்வி பாடசாலை அனந்தபுரம் மணியம், வை. பெத்தாப்பு செட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. கடவுள் வணக்கம் நடந்த பிறகு, பெண் பாடசாலை தலைமை ஆசிரியர் R. அனந்த நாராயணன் "எழுத்தறிவு" என்பது பற்றி மக்களுக்கு எவ்வாறு உணவு, உடை, தண்ணீர், காற்று முதலியன இன்றியமையாததோ அவ்வாறே எழுத்தறிவும் இன்றியமையாதது என்றும், அதற்காகவே அரசாங்கம் முதியோர் கல்வி இயக்கம் ஏற்படுத்தி நடத்தி வருவதாகவும், நம் தமிழ் மூதாட்டியின் பழமொழியாகிய "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்றபடி நாம் ஒவ்வொருவரும் எழுத்தறிவு பெற வேண்டும். புதியதாக ஆரம்பித்த பெண்கள் முதியோர் பாடசாலையில் எல்லோரும் தங்கள் ஓய்வு நேரத்தில் வந்து பயின்று வர வேண்டும் என்றும் கூறினர்.

பிறகு ஆண் பாடசாலை தலைமை ஆசிரியர் R. நாகராஜன் முதியோர் கல்வியின் நோக்கங்களையும் முதியோர் கல்வி பயில்பவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் அரசாங்கத்தாரால் கொடுக்கப்படுகின்றன என்றும் முதியோர்கள் எழுத்தறிவு பெற்றால்தான் தங்கள் குழந்தையின் கல்வியைப் பற்றி அக்கரை கொள்ளுவார்கள் என்றும் கூறினர்.

(6) முனிசிபல் உயர்தர ஆரம்ப பாடசாலை, ரெயில்வே காலனி, ஈரோடு.

30-4-54ல் பாடசாலை மைதானத்தில் திரு E. C. சுப்ரமணியம், முனிசிபல் கவுன்சிலர், ஈரோடு, அவர்கள் தலைமையில் கடவுள் வணக்கத்திற்குப் பின் திரு. C. வடிவேலு (டிரைவர்) தலைவர் வரவேற்புரை ஆற்றிய பின் தலைமை ஆசிரியர் திரு. டேவிட் பொன்னையா அவர்களால் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. திரு. K. T. ராஜு, M. L. A. அவர்கள் தாம் உரையாற்றப் போவதில்லை என்றும் பொது ஜனங்கள் நாடகம், நடனம் முதலிய கதம்பக் காட்சிகளைக் கண்டு களிக்க ஆவலுடன் எதிர் பார்ப்பதால் கதம்ப நிகழ்ச்சிகள் நிகழ்ச்சி நிரலில் கண்டபடி நடைபெற்றன. திரு. P. V சுந்தரராவ் B.A. B E. அஸிஸ்டெண்டு என்ஜினீயர், ரயில்வே காலனி, ஈரோடு, அவர்களால் நன்ருக நடித்த மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

திரு. S. தங்கவேலு (ரயில்வே ஆஸ்பத்திரி) உதவிக் காரியதரிசியால் நன்றி கூறப்பட்டு நாட்டு வாழ்த்துடன் இனிது முடிந்தது.

(7) குஷால் சந்த் உயர்தர ஆரம்பப் பாடசாலை, திண்டிவனம்.

5-5-54ல் இப்பள்ளியின் மாணவர் சங்க ஆண்டு விழா திரு T. S. இராமச்சந்திரன், B. A., B T. (வட்டக் கல்வி கண்காணிப்பாளர்) அவர்களின் சீரிய தலைமையின் கீழ் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் இபபள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. S. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் வரவேற்புரை கூறப்பட்டது. பள்ளி மாணவன், தங்கமணியால் ஆண்டு அறிக்கை வாசிக்கப் பட்டது. பின் "கல்வி" என்ற தலைப்பில் திரு. L. S. ரங்கசாமி அய்யர் (உதவி வட்டக் கண்காணிப்பாளர்) அவர்கள் அழகாக சொற்பொழிவு ஆற்றினர்கள். மற்றும் "வீரத்தாய்" என்ற புறநானூற்றுச் செய்தி அடங்கிய நாடகமும், "உண்மை

வீரம்" என்ற வரலாற்று நாடகமும் மாணவ மாணவிகளால் மக்கள் மகிழுமாறு நடத்திக் காட்டப்பட்டன. உள்ளூர் காங்கிரஸ் பிரமுகர், திரு. ஜனுப் சுபான சாயபு அவர்களால் "பெற்றோரும் பாடசாலையும்" என்பது பற்றி சொற்பொழிவாற்றப்பட்டது. முடிவாக மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்கப்பட்டு தலைமை ஆசிரியர் அவர்களின் நன்றியுரையுடனும் தேசிய கீதத்துடனும் விழா இனிது முடிந்தது.

**(8)** திருச்சி வரகனேரி பாடிசன் ஹரிஜனப் பள்ளி.

30-4-54ல் இப்பள்ளியின் 27வது ஆண்டு விழா திருச்சி ஜில்லா வெல்பேர் ஆபீசர் திருவாளர் M. மரியசுந்தரம், B. A. அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தது. 500க்கு மேற்பட்ட பெற்றோர்கள் வந்திருந்தனர். பல இலாகா சர்க்கார் அதிகாரிகளும் விழாவில் கலந்துகொண்டனர். பள்ளி மாணவிகள் நடனமாடி சபையோரை மகிழ்வித்தனர். பள்ளி மாணவ மாணவிகள் பலவகையான போட்டி விளையாட்டில் கலந்துகொண்டனர். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு தலைவர் பரிசுகள் வழங்கினர்.

பள்ளி தலைமையாசிரியர் ஆண்டு அறிக்கையை சமர்ப்பித்தார். தலைவர் முன்னுரைக்குப் பிறகு திருச்சி ஹரிஜனத் தலைவர் P. சிவபிச்சையும் அவருக்கு அடுத்து மாஜி ஹரிஜன் M. L. A., R. மருதை அவர்களும் தங்களுடைய சொற் பொழிவில் இப்பள்ளியை ஹரிஜன உயர்தரப் பாடசாலை ஆக்க வேண்டுமென்றும், சர்க்கார் புதிய கல்வி திட்டத்தை கை விட வேண்டுமென்றும் சொன்னார்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின் தலைமையாசிரியர் எல்லோருக்கும் வந்தனோபசாரம் கூற விழா இனிது முடிந்தது.

**(9)** எட்டயபுரம் ஆரம்ப ஆசிரியர் சங்கம்.

24-4-54ல் மு. கைலாச சுந்தரம் தலைமையில் கூடியது. செயலாளர் கி. முத்துராம கிருஷ்ணன் அறிக்கை வாசித்தார். பாடத்திட்டம்பற்றி முத்துக்கிருஷ்ணன், ஜெயராஜ் ஆகியோர் பேசினர்.

கி. முத்துராமகிருஷ்ணன் ஆசிரியரை புதிய கல்வித் திட்டம் காரணமாக விலக்கக் கூடாது என்ற அறிக்கையை விளக்கினார். நன்றி செயலாளர் நவில நாட்டு வணக்கத்துடன் கூட்டம் கலைந்தது.

**(10)** அய்யம்பாளையம் ஆரம்ப ஆசிரியர் குழு.

24-4-54ல் அய்யம்பாளையம், போர்டு உயர்தர ஆரம்பப்பள்ளித் தலைமை ஸ்ரீ K. R. சுப்ரமணியம் அவர்களின் தலைமையின்கீழ் ஆரம்பமானது. சங்க நிகழ்ச்சிக்குப்பின் திண்டுக்கல் வட்டாரக் கல்விச் சோதகரின் உத்தரவுப்படி 1954-55க்கு சங்கத்தின் நிர்வாகஸ்தர் தேர்தல் நடைபெற்றது. ஸ்ரீ N. P. கிருஷ்ணஸாமியைச் செயலாளராகவும், ஸ்ரீ குணம் ரத்தினம் அவர்களை பணப் பாதுகாப்பாளராகவும் தீர்மானிக்கப்பட்டது.

**(11)** ஆசிரியர் மானேஜர் சங்கம், திருவண்ணுமலை.

8-5-54ல் நடந்த இச்சங்கத்தின் பொதுச் சபையில் செய்த திர்மானம் 2.

புதுக் கல்வி திட்டம் 1953ம் வருஷம் ஜுலை மீ முதல் கிராமங்களில் நடைமுறையில் நடந்து வருகிறது.

இக்கல்வித் திட்டம் நடைமுறையில் உள்ளதை பொது மக்கள் எதிர்ப்பதாலும், அனுபவ சாத்தியமற்றதாக கருதப்படுவதாலும், கிராமங்களில் மேலும் நீடிக்குமானல் பாடசாலைகள் எல்லாம் நடைபெருது மூடும் நிலைமை தோன்றுவதாலும், அநேக மானேஜர்கள் நஷ்டத்தை அடைய வேண்டியிருப்பதாலும், இப்புதுக் கல்வித் திட்டத்தை உடனடியாக ரத்து செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறது.

**(12)** இலக்குமிபுரம், சொக்கலிங்க வித்தியா சாலை.

12-5-54ல் புதுக்கோட்டை நகராண்மைக் கழக ஆணையாளர் உயர்திரு. R. S. இராமலிங்கம் அவர்கள் தலைமையில் 27வது ஆண்டு பரிசளிப்பு விழா கொண்டாடப் பெற்றது. முதன் முதலில் தலைவரவர்களை இவ்வூர் நகரச் சிவன் கோவிலிலிருந்து மாணவ மாணவிகள் தமிழ்மறை ஓத மேள வாத்தியம் முழங்க வித்தியாசாலைக்கு அழைத்து வரப்பெற்று விழா தொடங்கப் பெற்றது. இறை வணக்கத்துக்குப்பின் அதிபர் ந. சொ. அரு. அருணசலன் செட்டியாரவர்களால் தலைவர்களுக்கு மலர்மாலை சூட்டப்பெற்று வரவேற்பிதழ் வாசித்து அளிக்கப்பட்டது. பின் விததியாசாலைத் தலைமை ஆசிரியர் G. சுவாமிநாதய்யர் அவர்களால் ஆண்டு அறிக்கை வாசிக்கப் பெற்றது.

தலைவரவர்கள் முகவுரைக்குப்பின் மாணவ மாணவிகளின் பாட்டு, பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டங்கள் சபையோர்களாலும் தலைவரவர்களாலும் பெரிதும் விரும்பி ரசிக்கப்பெற்றன.

பின் காரைக்குடி நகர் நலச் சங்கத் தலைவர் உயர்திரு. ஆவி. லெ. அருணசலன் செட்டியாரவர்கள் "வேடனும், விஜயனும்" என்னும் பொருள் பற்றியும் கோனபட்டு சரஸ்வதி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் க. தில்லைக் கோவிந்தன் அவர்கள் "மனமும் இனமும்" என்ற பொருள் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தலைவரவர்களின் பொருள் ததும்பிய முடிவுரைக்குப்பின் மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் தலைவரால் வழங்கப்பெற்றன.

வித்தியாசாலை அதிபர் ந. சொ. அரு. அருணசலன் செட்டியாரவர்கள் நன்றி கூற விழா நிறைவேறியது.

## சந்தாதார்களுக்கு அறிக்கை

1954 மே மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை—M. 13.
வட ஆற்காடு—NA. 37, 40.
கோயம்புத்தூர்—Co. 23.
மதுரை—Md. 19.
ராமநாதபுரம்—Rd. 2, 47, 48, 58.
சேலம்—S. 5, 52.
தஞ்சாவூர்—Tan. 6, 21, 30.

குறிப்பு :—சந்தா நம்பர் விலாசத்தோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. மணியார்டர் கூப்பன்களில் **சந்தா நம்பரையும் விலாசத்தையும்** குறிப்பிடவும். தற்சமயம் சந்தா கட்ட அசௌகரியமுள்ளவர்கள் சந்தா கட்டக்கூடிய தவணையை முன்கூட்டியே தெரிவித்தால் நலமாயிருக்கும். வி. பி. அனுப்புவதில் உள்ள அசௌகரியங்களை உத்தேசித்து சந்தாவை முன்கூட்டியே அனுப்பிவிடும்படி நேயர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். —பத்திராதிபர்


## தமிழ் உபபாட புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

**இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.**

### தேச பக்த மாலை

வித்வான் எம். சண்முகம் பிள்ளை
எழுதியது
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
அவர்களின் முகவுரையுடன் கூடியது

| | அணு | | அணு |
|---|---|---|---|
| 1. மகாத்மா காந்தி | 10 | 4. கவியரசி சரோஜினி | 8 |
| 2. கவியரசர் தாகூர் | 8 | 5. தேசீய கவிமணிகள் (பாரதியார், தாகூர், சரோஜினியார்) | 12 |
| 3. தேசிய கவி பாரதியார் | 8 | | |

எம். அனந்த நாராயணன், பி. ஏ., எல். டி.
எழுதியவை

6. வீர சிவாஜி அணு 10  7. சுவாமி விவேகானந்தர் அணு 12

**பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்**
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

# பத்திராதிபர் குறிப்பு

## புதிய ஆரம்பப் பள்ளிகள்

நமது ராஜ்யத்தில் இவ்வருஷத்தில் சுமார் 1200 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப் போகின்றார்கள். அவற்றிற்காகும் செலவில் ஒரு பகுதியை இந்திய அரசாங்கம் ஏற்க முன்வந்துள்ளது. இந்தப் பண உதவி மூன்று வருஷ காலத்திற்குத்தான் கிடைக்கும்; பிறகு ராஜ்ய சர்க்காரே இப்பள்ளிக்கூடங்களுக்காகும் முழுச்செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இப்போது நமது ராஜ்யத்தில் ஆயிரக் கணக்கான சிற்றூர்களில் பள்ளிக்கூடங்களே இல்லாமல் இருக்கிறது. அவற்றுள் சில கிராமங்கள் மிகவும் சிறியவை; 500 பேருக்கு மேல் 1000 பேர்கள் கொண்ட ஜனத்தொகை உடையவை. இவ்வித சிறு கிராமங்களில்தான் இப்புதிய பள்ளிகளை அமைக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்டம்.

இப்புதிய பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் வேண்டும் அல்லவா? கல்வி கற்றவர்கள் பலர் வேலையில்லாமல் இருந்து வருகிறார்கள். 'வேலையில்லாமை' என்ற நிலைமை மிகவும் முக்கியமான பிரச்னை. அதைத் தீர்த்து வைப்பது சர்க்காரின் கடமையாகும். வேலையின்றிக் கவலையுடன் தமது காலத்தைக் கடத்திவரும் படித்த யுவர்களுக்கு வேலை உண்டாக்கிக் கொடுக்கவும், கிராமங்களில் கல்வி வசதிகளை பெருக்கவுமே இந்தப் புதிய பள்ளிக் கூடங்கள் ஏற்படும் என்று தெரிகிறது.

பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இப்பள்ளிகளுக்குக் கிடைக்க மாட்டார்கள் என்பது தெளிவாக விளங்குகிறது. ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தையும், அவர்களுடைய வேலையில் உள்ள சிரமத்தையும், அவர்கள் பணியாற்றும் இடத்தின் சூழ் நிலையையும் யாவரும் அறிவர். வேலையைத் தேடிவரும் இளைஞர்கள் ஆசிரியராகப் பணியாற்ற முன்வருவார்களா என்பதே சந்தேகத்திற்கு இடந்தருகிறது. அவரவர்களுடைய கஷ்ட நிலையில் சிலர் ஆசிரியராக இருக்க முந்திக் கொள்ளுவார்கள் என்றாலும், பயிற்சி பெறாதவர்களைக்கொண்டு இப்புதிய பள்ளிக்கூடங்களை நடத்துவது சாத்தியமாகாதென்றே சொல்லலாம்.

இந்தத் திட்டத்தின்படி, புதிதாக அமர்த்தப்படும் ஆசிரியர்களை பழைய பள்ளிக்கூடங்களில் வேலை செய்ய விட்டுவிட்டு, அனுபவம் மிகுந்த பழைய ஆசிரியர்களைக்கொண்டு புதிய பள்ளிகளை நடத்துவது பயன் தரும் என்று தோன்றுகிறது. இந்த ஏற்பாட்டினால் இரண்டு வழிகளில் நன்மை உண்டாகும். பயிற்சி பெறாத புதிய ஆசிரியர்களை ஐந்து அல்லது ஆறு ஆசிரியர்கள் உள்ள பெரிய பள்ளிகளில் அமர்த்தி, அவர்களுக்குப் போதனை முறைகளில் அனுபவமும் பயிற்சியும் சிறிதளவு உண்டாக்க முறை செய்பலாம். அனுபவம் உள்ள பழைய ஆசிரியர்கள் புதிய பள்ளிகளில், தாம் ஒருவராகவே பல வகுப்புக்களையும் சமாளித்து, குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் முறைகளைப் பின்பற்றக்கூடும்; கிராம வாசிகளின் சமூக வாழ்வில் கலந்து கொண்டு, அவர்களின் கூட்டுறவையும் பெறக்கூடும். கிராமவாசிகளின் கூட்டுறவும், ஆர்வமும், ஆதரவும் இன்றி இப்புதிய பள்ளிக்கூடங்கள் சிறு கிராமங்களில் வேர் ஊன்றி நிலைதிருக்க முடியாது.

மேலும் இப்புதிய பள்ளிக்கூடங்கள் எல்லாம் ஒரு ஆசிரியரைக்கொண்ட பள்ளிக்கூடங்களாவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஒரு - ஆசிரியர் பள்ளிக் கூடங்களைத் திறமையாக நடத்துவது எளிதன்று. அங்கு பணியாற்றும் ஆசிரியர் புதிய புதிய முறைகளைச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கையாளவேண்டும். பல வகுப்புக்களில் வாசிக்கும் சிறுவர்களுக்குத் திறமையான முறையில் கற்பிக்க வேண்டும். இவ்விதப் பள்ளிகளைப் பயிற்சி பெறாதவர்கள் பொறுப்பில் விடு

வது நல்லதல்ல. ஆனால், ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிட்டபடி பிரைவேட் ஆசிரியர் குழாங்களின் உதவிகொண்டு குறுகியகால ஆசிரியர் பயிற்சி முகாம்கள் நிறுவி, படித்து வேலை இல்லாமல் இருப்பவர்களுக்குத் தீவிரப் பயிற்சி அளித்து புதிய கிராமப் பள்ளிக்கூடங்களில் அமர்த்தி கல்வியபிவிருத்தி செய்யலாம்.

ஓராசிரியர் பள்ளிகள் செல்வம் மிகுந்த அமெரிக்க ஐக்கிய நாடுகளில்கூட பல்லாயிரக் கணக்கில் உள்ளன. அவைகளும் நல்லமுறையில் கல்வி போதித்து வருகின்றன. நமது சிற்றூர்களிலும் அவ்விதப் பள்ளிகள் இருந்துவரும் என்பது உண்மை. ஆகையால் நவீன முறைகளை ஆசிரியர்கள் பயன்படுத்திக்கொண்டு கிராமச் சிறுவர்களுக்கு கல்வி போதிப்பதற்கு சர்க்கார் உதவிசெய்தால், இப்புதிய பள்ளிக்கூடங்களினால் கல்வி வளர்ச்சி உண்டாகும் என்று நினைக்க இடமிருக்கிறது.

---

## கடிதப் பெட்டி

ஐயா,


இவ்வாண்டு 8ம் வகுப்புப் பொதுத் தேர்வு முடிவுகளைக் கண்டு திடுக்கிடாதவர்கள் இல்லை. இத் தேர்வுக்கு பாடசாலையினின்று கலந்து கொள்ளும் மாணவர்கள் மிக்க சிறுவயதினர். இத்தகையவர்கட்கு மிகக் கடினமும், சிக்கலானதுமான கேள்விகள் கேட்டு குழப்பமடைய வைப்பதோடு இவ்வாண்டு மிகக் குறைந்த மாணவர்களுக்கே அரசினர் தேர்ச்சி கொடுத்து சான்றிதழ்கள் வழங்கியுள்ளார்கள். நன்கு படிக்கக் கூடிய மாணவர்கள் இவ்வாண்டு தேர்வில் தோல்வியடைந்திருப்பது வியப்பிற்குரியதாயுள்ளது. ஆகையால் அரசினர் இவ்வாண்டுத் தேர்வின் முடிவுகளை மறுபரிசீலனை செய்வார்களென எதிர் நோக்குகிறேன்.

தவிர இத்துறையில் இழைக்கப்படும் இன்னொரு குறைபாடுள்ளது. சமவயதினரும், திறத்தினருமான மாணவர்கள் 8ம் வகுப்பிலும், உயர்தரப் பள்ளியின் மூன்றும் படிவத்திலும் பயில்கின்றனர். இவர்களுக்கான பாட திட்டத்தில் சிறிதளவு மாறுபாடு இருந்த போதிலும் இவர்களுடைய தகுதியும், திறமும் சமமாகக் கருதப்படுகிறது. 8ம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஆங்கில பாடத்துடன் தேர்ச்சியடைந்த மாணவர்கள் 4ம் படிவத்தில் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர்.


இவ்வாறிருக்க உயர்தரப் பள்ளியின் மூன்றும் படிவ மாணவர்கள் பள்ளிக்கூட பரீட்சையின் மூலம் மேல் வகுப்புக்கு மாற்றப் படுகின்றனர். 8ம் வகுப்பு மாணவர்கள் மட்டும் பொதுத் தேர்வுக்கு உட்படுத்தப் படுகின்றனர். இதனால் அனாவசியமான குழப்பங்களும், ஏற்றத் தாழ்வுகளும், மாணவர்கள் பள்ளியை மாற்றுதலும் ஏற்படுகின்றன. ஆகவே, அரசியலார் கூடிய விரைவில் இக்குறையை நீக்கி இவ்விரு திறத்தாருக்கும் ஒரே பாடத்திட்டத்தை அமைத்து படிப்பு முறையை ஒன்றாக்கி யாவரையும் பொதுத் தேர்வுக்கு உட்படுத்தவரென நம்புகிறேன்.

தேசிய உயர்
துவக்கப்பள்ளி,
நெல்லிக்குப்பம்,
10—6—54.

இன்னணம்
T. K. Ranganathan,
பொறுப்பாளர்.



*Dr. A. Lakshmanaswamy Mudaliar delivering his Presidential Address.*



*Sri S. Govindarajulu Naidu addresses the Conference declaring open the Educational Exhibition.*

Regd. No. M. 3473


THE

# S. I. T. U. PROTECTION FUND LTD.

**520, HIGH ROAD, TRIPLICANE, MADRAS-5**

*(Registered under the Insurance Act as a Mutual Insurance Co.)*

## Total Assets Exceed 12,00,000

**No. of Policy-holders over 4500**

Please remember that this is your own Insurance Society and that its members form, as it were, a co-operative group to enable one another mutually to make provision for their old age and their families.

There are five tables for 10, 15, 20, 25 and 30 years.

Teachers may take ONE to SIX units according to their ages.

One unit guarantees a benefit of Rs. 250/-, which goes on increasing by Rupees Five after every year of membership.

You will not find a cheaper Insurance Cover.

By taking a Policy in the Protection Fund, you strengthen the teachers' organisation and at the same time make provision for your old age and family.

For particulars write to :

THE SECRETARY.



Printed by Sri T. K. Venkatesan at The Jupiter Press, Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited & Published by Sri S. Natarajan for "The South India Teachers' Union" 520, High Road, Triplicane, Madras.